REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 22உ திங்கள் (4—2—57) ★ ★ வெளியீடு: தை 23உ செவ்வாய் (5—2—57) [இதழ் 204

அபேட்சகர்களுக்கு உதவ புத்தகம்!

சென்னை, பிப். 3—

வருகிற பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு உதவியாக ஒரு சிறு புத்தகத்தை தேர்தல் குழுவினர் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதில், அபேட்சகர்களுக்குத் தேவையான விவரங்கள் மட்டுமல்லாமல், தேர்தல் குழு விடுத்துள்ள தேர்தல் நிர்வாக விவரங்கள் போன்றவைகளும் அடங்கியிருக்கின்றன.

இதுபோலவே தேர்தல் ஏஜெண்டுகளுக்கான ஒரு புத்தகத்தையும் குழு ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது.

வானமே இடிந்து விழுவதானாலும் திராவிட நாடு பெற்றே தீருவோம்

இல்லை என்ற ஆணவம், பாகிஸ்தான் அமைவதைத் தடுத்ததா?

அடித்தால்தான் அளந்து கொடுப்பீர்களா?

நேருவுக்கு அண்ணா தரும் பதில்

காஞ்சீபுரம், பிப். 4—

"வானமே இடிந்து விழுந்தாலும் திராவிட நாடு கிடையாது என்று பேசினாராம் நேரு பண்டிதர், சென்னைக் கூட்டத்தில்.

"நான் கூற விரும்புகிறேன்—'வானமே இடிந்து விழுவதானாலும், நாங்கள் திராவிட நாடு பெறாமல் விடமாட்டோம்'— என்று!

"சர்ச்சில்கூட இப்படித்தான் கூறினான்—'என்னதான் நிகழுவதானாலும் இந்தியாவுக்குச் 'சுதந்திரம்' தரமாட்டேன்'—என்று! சுருட்டுப் புகையினூடே வார்த்தைகளை, ஆணவமாக அள்ளி வீசினான்; ஆனாலும் நடந்தது என்ன?

"பாகிஸ்தான் அமைவதற்கு முன்னும் அப்படித்தான் சொன்னார்கள், நேரு போன்றவர்கள்!

"பாகிஸ்தானைக் கொடுக்காமல், இங்கே வந்து, 'திராவிட நாடு கிடையாது' என்று பேசினாலாவது, 'பண்டிதர்களுக்கு விவேகம் இல்லாவிடினும் வீரமாவது இருக்கிறது' என்று நாம் கருதமுடியும். ஆனால், பாகிஸ்தானைக் கொடுத்தான பிறகு, 'திராவிட நாடு கிடையாது' என்ற வாதத்தில் விவேகமும் இல்லை; வீரமும் இல்லையே!

"பாகிஸ்தான் வேண்டுமென்ற மக்கள், 'கிடையாது என்று பண்டிதர்கள் சொன்னபோது, அவர்களை அடித்தார்கள்; உடனே இந்த வீரர்கள், பாகிஸ்தானை அளந்து கொடுத்தார்கள்!

"இப்போது பண்டிதர் இங்குவந்து, 'திராவிட நாடு கிடையாது' என்று சொல்வதற்கு என்ன பொருள்? 'திராவிடர்களே நீங்களும் அடிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்பது தானா?

"நாங்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தவர், அதுபோன்ற பலாத்காரச் செயல்களில் ஈடுபடமாட்டோம். ஆனால், அண்ணாதுரைக்குக் கட்டுப்படாதவர்களாக நாட்டு மக்கள் சென்றுவிட்டால்.........?

"துடிப்புள்ள வாலிபர்கள் கூடி, 'திராவிட நாடு பெற எல்லா அமைதியான வழியும் பார்த்தாயிற்று; இனி வேறு வழி என்ன?'—என்று யோசித்து, உள்ளது பலாத்காரம்தான்' என்று முடிவு செய்தால், நாட்டு நிலைமை என்னாவது?

"தலைகீழாக நின்றாலும் கூலியை உயர்த்தமாட்டேன்—என்கிறான் முதலாளி; கடன் கொடுப்பவர்கூட சில நேரங்களில், 'தலை கீழாகத் தவம் செய்தாலும் கிடையாது' என்றுதான் கூறுகின்றனர். ஆனால், கூலி உயர்வும், கடனும் வாங்காமலா விடுகிறார்கள் நாட்டில்?

"நான் கேட்கிறேன் — 'தலைகீழாக நின்றாலும் கூலி உயர்வு கிடையாது போ' என்று பேசும் முதலாளிக்கும், 'என்னதான் நிகழ்ந்தாலும் திராவிட நாடு கிடையாது' என்று பேசும் பண்டிதருக்கும் என்ன வித்தியாசம், தரத்திலே?"

என்று, அண்ணா அவர்கள் நேற்று மாலை, காஞ்சியில் பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்ட ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

வெட்கம் வேண்டாமா?

தொடர்ந்து பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரசாருக்கு வெட்கமிருக்க வேண்டாமா? சென்னையில், நான் எத்தனை கூட்டங்களில் கூறினேன்—'31-ந் தேதி பண்டிதர் வருகிறார்; என்னையும் அந்த மேடைக்கு அழைத்துச் செல்லுங்கள்; ஒரு அரை மணி நேரம் திராவிட நாடு வேண்டும் என்பதற்கான காரண விளக்கங்களை நான் அவர் முன்னிலையில் எடுத்துரைக்கிறேன். நான் கூறுவது தவறு என்னும் வகையில், அவர் எனக்குச் சமாதானம் சொல்லிவிட்டால், நான் அவர் தாளடியில் என் தலையைத் தாழ்த்தி வணங்குகிறேன்; நான் கூறுவதில் அவர் திருப்தியடைந்திருந்தால், என்னைக் கட்டித் தழுவிக்கொள்ள வேண்டாம்—கைகுலுக்க வேண்டாம்; யோசிக்கிறேன் என்று சொன்னால் போதும்'—என்று! செய்தார்களா காங்கிரசார்? துணிவிருந்தால் செய்திருக்கலாமே!

"நேரு பண்டிதர் இங்கு வரும் போது, 'தி. மு. கழகத்தின் திராவிட நாடு கோஷத்தைக் கண்டியுங்கள்; எங்களுக்கு ஆயிரம் ஓட்டுக் கிடைக்கும்' என்று இங்குள்ள காமராசர்கள் கூறினால் அதை நம்பி, வாய்க்கு வந்தபடி பேசிவிட்டுச் செல்கிறார் நேரு; 'திராவிட நாடு கிடையாது' என்கிறார்.

"நமக்கு நன்றாகத் தெரியும் நேரு பெருமகனாரின் வீரம், எது வரை செல்லும்—எங்கு திரும்பும் என்பது."

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

முன்னாள் கவர்னரும் போட்டியிடுகிறார்

இராசஸ்தான், பிப். 4—

முன்னாள் கவர்னரான எச். பி. மோடி மக்கள் சபைக்கு இராசஸ்தானில் போட்டியிடுகிறார்.

★★★-★★★★-★★★★★★★★★★

சென்னை சட்டசபைத் தேர்தல்

காரைக்குடி தொகுதிக்கு

தி. மு. கழக அபேட்சகராக

இராம. சுப்பையா

நிறுத்தப்பட்டிருக்கிறார்.

இவரை எதிர்த்து, காங்கிரஸ் சார்பில் சா. முத்தைய செட்டியாரும் சுயேச்சையாக சிலரும் போட்டியிடுவதாகத் தெரிகிறது.

★★★★★-★★★★★★★-★★★★★★

ரூ. 10 - கோடி மதிப்புள்ள

டீசல் எஞ்சின்கள்!

இந்தியா வரவழைக்குமாம்

நியூயார்க் நிறுவனத்திற்கு ஆர்டர் தரப்பட்டிருக்கிறதாம்

புதுடில்லி, பிப். 1—

இரண்டாவது திட்டத்தையொட்டி ஏற்படக்கூடிய போக்குவரத்து வசதிக் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக, மத்திய இரயில்வே குழு, 2 000 குதிரை வேகம் கொண்ட 100 டீசல் எஞ்சின்களை வரவழைக்க முடிவு செய்து, அதற்கான ஆர்டர்களையும் நியூயார்க்கிலுள்ள ஒரு நிறுவனத்திற்குத் தந்திருக்கிறதாம்.

இந்த 100 எஞ்சின்களுக்காகத் தரப்பட்ட ஆர்டர்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ 10,07,00,000 என்றும், முதல் தவணையாக அனுப்பப்படும் 20 எஞ்சின்களும், இந்த ஆண்டு ஜூன் திங்களில், இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என்றும் தெரியவருகிறது

இந்த எஞ்சின்களைப் பழுது பார்க்கவும், அவைகளைக் கையாளவும், சில இந்தியருக்குத் தகுந்த பயிற்சியளிக்கவும் அந்த நிறுவனம் இந்திய சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், அவ்வொப்பந்தப்படி, இந்தியாவிலும் அமெரிக்காவிலும் அவர்களுக்குப் பயிற்சி தரப்படும் என்றும் தெரிகிறது.

(4-ம் கலத்தின் தொடர்ச்சி)

படும் போக்குவரத்து வசதிகளுக்காக ஜீப்கள், டிராக்டர்கள், லாரிகள் போன்றவற்றிற்காகவும் ரூ 9,09,000 அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

★★★★-★★★★★★★★★★-★★★★

தி. மு. க. தேர்தல் அறிக்கைக் குழு

★

7—2—57(வியாழன்) பிற்பகல் 3-மணிக்கு, சென்னை இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை (Election Manifesto) குழுக் கூட்டம் நடைபெறும். அது போது தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை குறித்து இறுதிப் பரிசீலனை நடைபெறும்.

★★★★★★★-★★★★★★★-★★★★

★★★★★★-★★★★★★★★-★★★★

சென்னை சட்டசபைத் தேர்தல்

கடலூர் தொகுதிக்கு

தி. மு. கழக அபேட்சகராக

இரெ. இளம்வழுதி

நிறுத்தப்பட்டிருக்கிறார்.

தலைமைக் கழகம் (தி. மு. க)

★★★★★★★★★-★★★★-★★★★

நெய்வேலித் திட்டம்

இயந்திரங்கள்வராததாலேயே வேலைகள் தாமதமாயினவாம்

புதுடில்லி, பிப். 1—

பழுப்பு நிலக்கரியைத் தோண்டியெடுப்பதற்கென திட்டமிடப்பட்டுள்ள நெய்வேலி சுரங்கத் திட்டத்தின் முதல் முக்கிய வேலை அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறதாம்.

இந்த வேலைகளுக்குத் தேவையான சில குறிப்பிட்ட மேற்கு ஜெர்மன் இயந்திரச் சாமான்கள் வருவதற்குத் தாமதமேற்பட்டதால் இதுவரை அத்திட்டப் பகுதியிலுள்ள மற்ற சில வேலைகளையே அங்குள்ள அதிகாரிகள் மேற்கொண்டு வந்தனராம்.

இந்த முக்கிய வேலைக்குத் தேவையான சில இயந்திரங்களுக்காக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், அவை இம்மாத இறுதியிலேயே வந்துவிடுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதுவரையிலும் மொத்தம் ரூ. 3,05,00,000 பெறுமான மதிப்புள்ள இயந்திரங்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளனவாம்.

மேலும், நெய்வேலித் திட்டப் பகுதி வேலைகளுக்கென தேவைப்

(1-ம் கலம் பார்க்க)

தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த சோஷலிஸ்டு ஊழியர்

ஈரோடு அருகே வெட்டிக் கொல்லப்பட்ட கோரம்

ஈரோடு, பிப். 3—

தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்த சோஷலிஸ்டு கட்சி ஊழியர் ஒருவர் இங்கு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஈரோடிலிருந்து முத்தூர் செல்லும் பெரிய சாலையருகே, ஒரு பிரேதம் தலையில்லாமல் கிடப்பதை போலீசார் கண்டனர். கொல்லப்பட்டவர் சோஷலிஸ்டுக் கட்சி ஊழியர் என்பது அவரது சட்டைப் பையிலிருந்த சில பிரசுரங்கள் மூலம் தெரியவந்தது.

விபரமறிந்ததும் சோஷலிஸ்டு தலைவர் சின்னசாமி ஸ்தலத்திற்கு விரைந்து ஊழியர் சுந்தரம் என்பதை அடையாளம் கண்டார்.

தலை காணவில்லை

போலீசார் தீவிரமான புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர். தலை அகப்படவில்லை, இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

சுந்தரத்தின் சவம், இங்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. கருப்புக் கொடிகளுடன் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்

தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்களும், சோஷலிஸ்டு தலைவர் சின்னசாமி அவர்களும் தோழர் சுந்தரத்தின் சேவை குறித்துப் பேசினர்.

தி. மு. க. கூட்டம் ரத்து

தேர்தல் பிரச்சாரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தி. மு. க. சோஷலிஸ்டு கட்சி கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

இந்த பயங்கரமான படுகொலை ஈரோடு வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராசா, இராணிகளுக்கு காங்கிரஸ் டிக்கெட்டாம்!

பரோடா, மண்டி மகாராசாக்கள் காங்கிரஸ் அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனராம்.

குவாலியர் மகாராணியும் காங்கிரஸ் அபேட்சகராக பில்சா மக்கள் சபை தொகுதியில் போட்டியிடுகிறாராம்.

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—2—'57 திங்கள்

வரலாறு கூறுவது என்ன?

இந்தியா என வழங்கப்பட்டுவரும் இப்பெரும் நிலப்பரப்பு, என்றும் ஒரே ஆட்சியின்கீழ் இருந்தது கிடையாது. அதுவுமன்றி ஒரே இனம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே சமயம் என்ற அமைப்புகளுடன், இப்பெரும் நிலப்பரப்பில் முன்னாள் வாழ்ந்த மக்கள் என்றும் கிடையாது என்ற பேருண்மையையும் வரலாறு தாங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல், மக்களியல் பற்றி விளக்கமளிப்பதுடனும் வரலாறு இருந்துவிடவில்லை. ஆங்கிலேயன் வந்தவரையில் ஏற்பட்ட பலப்பல படையெடுப்புகளுக்கும் பணிந்து கொடுத்தத் துக்ககரமான உண்மைகளையும் இந்திய வரலாறு சுமந்து கொண்டும் இருக்கிறது.

இவ்வளவு படையெடுப்புகளும் தென்னகத்தில் நெடுந்தொலைவிற்கு ஊடுருவிச்சென்றதில்லை. அதுபோன்றே வடநாட்டில் நிலைத்து நின்று ஆட்சிபுரிந்த ஆதிபத்திய முனைப்பினரும் அமுழுபறசிரில் தம் விருப்பம்போல் முழுவெற்றி பெற்றது கிடையாது.

இப்பெரும் நிலப்பரப்பில் நிலவழி புகுந்தவர் முடிவு இதுவாக இருக்க, கடல்வழி புகுந்த டச்சுக்காரரும் போர்த்துகீசியரும், பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும்தான் தென்னகத்தில் கால்வைக்க முடிந்தது. பின்னர் ஆங்கிலேயர் மட்டுமே ஒரு ஆதிபத்திய அரசை, காலப்போக்கில் கட்டிக்காக்க முடிந்தது.

இந்தியத் துணைக்கண்டத்தின் மீது, நிலவழியாகவும் கடல் வழியாகவும் படையெடுத்துவந்த எவரும், இத்துணைக்கண்டத்தில் வாழ்ந்த பலவகைப்பட்ட மக்களின் கருத்தறிந்து உள்நுழைந்தவர்களன்று. அதேபோன்று, தங்கள் தங்கள் ஆட்சியையும் அவ்வப்பகுதி மக்களின் விருப்பமறிந்து அமைத்தவர்களுமல்லர். அவர்கள் அமைத்த ஆட்சிகள் அனைத்தும் ஆயுத பலத்தாலும் சூழ்ச்சித் திறனாலும் அமைக்கப்பட்டவைகளேயாகும்.

நிலவழி நுழைந்த அரசுகளின் நிலை இதுவாக இருக்க, இறுதியாகக் கடல்வழி நுழைந்த ஆங்கில ஆட்சிதான், முதல் முதலாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் ஒரு பேரரசை அமைப்பதில் வெற்றி கண்டது. அப்பேரரசினூடே, அதனுடன் இரண்டறக் கலக்காத கூட்டரசு அமைப்புகளும் இருக்கத்தான் இருந்தன.

அதற்கு முன்பாக எழுந்து வீழ்ந்திருந்த பலப்பல அரசமைப்புகள் போன்றே, ஆங்கிலேயப் பேரரசு அமைப்பும், மக்களின் ஒப்புதல்மீது எழுந்ததன்று. அப்பாக்கி பலத்தாலும் சதிச் செயல்களாலும் நிலைநாட்டப்பட்ட அரசுதான் ஆங்கிலப் பேரரசும்.

பல்வேறு இனம், பலப்பல மொழி, பலவகைப்பட்ட கலாச்சாரம், முரண்பட்ட சமயக் கோட்பாடுகள், வெவ்வேறு பழக்க வழக்கங்கள் ஆகிய வாழ்க்கை நிலைமைகளைப் பின்னணியாகக்கொண்டுள்ள மக்கள், காலமாற்ற வேகத்தின் காரணமாக ஒன்றுகலந்துவிடுவதற்கான வாய்ப்பு இருந்திருக்கிறதானாலும், இத்தனை நூற்றாண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டிய அளவில் கலப்பு ஏற்பட்டிருக்கவில்லை. ஒரு நாட்டு மக்கள் என்ற நினைப்பு உருவாகவில்லை. ஒருவரோடு ஒருவர் உறவு கொள்ளும் மனப்போக்கு இடம் பெறவில்லை. இன்றும் இடத்தைப் பற்றியோ, மொழியை அடிப்படையாகக் கொண்டோ இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் என்றும்போல் வெவ்வேறாகத்தான் இருந்துவருகின்றனர்.

இப்படி வெவ்வேறாக இருந்துவரும் மக்களின் விருப்பு அறியாமல்தான், ஆங்கில ஏகாதிபத்தியம்போலவே வடநாட்டுக் காங்கிரசுத்தலைமையும், இந்தியப் பேரரசை உருவாக்கிக் கட்டிக்காத்து வருகிறது. மக்கள் ஒப்புதல் பெறாது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் எதுவும், அது எவ்வளவு பலம் பொருந்தியதாக இருந்தபோதிலும், இறுதியில் என்றாவது ஒருநாள் சிதறிப்போவது நிச்சயம் என்ற வரலாற்று உண்மையை மறந்துவிடக்கூடாது. சிறக,

ஆட்சித்துறை ஒன்றைத் தவிர, இந்தியத் துணைக்கண்ட மக்களின் ஒத்தத் தன்மையைக் காட்டுகின்ற, கண்டிப்பாக இருந்து தீரவேண்டிய உறவுப் பண்பு எதுவும் இன்று இருக்கவில்லை. இந்தியப் பிரதமர் நேருவின் காலத்திலேயே உருவாக்க முடியாத உறவுப் பண்பு, அவருக்குப் பிற்காலத்தில் உருவாகக்கூடும் என எவர்தான் உறுதி கூறமுடியும்?

இந்தியப் பேரரசு அமைப்பும், அதற்குள்ள இராணுவ பலமும், இந்தியப் பிரதமர் நேரு போன்றவர்களின் சனநாயகப் பேச்சும் மட்டுமே ஒரு புத்தம் புதிய இந்திய தேசியத்தை உருவாக்கப் போதியதாகாது. இந்திய தேசியத்தையே உருவாக்க முடியாது என்கிறபொழுது, இந்திய மக்கள் என்ற புத்தம் புதிய மக்கள் இனத்தை உருவாக்க நினைப்பதும், வெறும் வீண் நினைப்பாகும்.

இந்திய மக்கள் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டதின் விளைவாகத்தான் இந்தியத் துணைக்கண்டத்து மக்களை காந்தியார் தலைமையில், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டனர் எனக் கூறுவது பொருந்தியதே பொருந்தாது. அன்னிய ஆட்சியான ஆங்கிலேய ஆட்சியை அகற்றவேண்டும் என்ற நினைப்பும், அதற்குப் பதில் நாம ஆளவேண்டும் என்ற நினைப்புந்தான், இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்கு, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடக்கூடிய ஆர்வ முனைப்புகளாக இருந்து வந்தன. காந்தியாரின் சிறந்த சேவை அவைகளைக் கூர்மையாக்கின.

ஆங்கிலேயர் அகன்றதும், ஆட்சிப் பொறுப்பு 'நம்மவர்' கைக்கு மாறியதும், அதுவரை தெளிவு படுத்தப்படாததும் தெளிவாகத் தெரியாததுமாக இருந்துவந்த 'நம்மவர்' யார் என்பதை திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டித் தீரவேண்டிய கட்டாயம் ஏற்படுவது இயல்பேயாகும். என்றும் காணப்பெறாத 'இந்திய மக்கள்' என்ற கற்பனை, மக்களை 'நம்மவர்' எனத் தீர்மானித்துப் பேசத் தொடங்கினர். அக்கருத்து, தங்களுக்கு உடன்பாடு உடையது அல்ல என்று வங்க மக்கள் வாதிட்டனர்—சீக்கியர்கள் எதிர்த்துப் பேசினர்—மராட்டியர்கள் மார்தட்டினர்—குசராத்தியர்கள் கோபித்தனர்—ஆந்திரர்கள் ஆத்திரங் கொண்டனர் — பஞ்சாபிகள் பாசறை அமைத்தனர்.

மாநிலப் புனரமைப்பின் போது இந்தியத் துணைக்கண்டத்தில் ஒவ்வோர் பகுதியிலும் இருந்து கிளம்பிய கூக்குரல், இந்தியப் பிரதமர் நேரு 'நமமவர்' என்பதற்குக் கொண்டுள்ள கற்பனைப் பொருளை ஒப்புக்கொள்ள மறுத்ததைத்தான் காட்டுகிறது. ஆனால், 'நமமவர்' பட்டியில் அடைக்கப்பட்டுள்ள பல்வேறு இன, மொழியினரும் நேருவின் ஆசைக்கொப்ப செயல்பட மறுக்கின்றனர். நேரு பண்டிதரோ, ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் போன்றே, பலம் பொருந்திய ஒரு பேரரசை, மக்கள் உணர்வுபூர்வமான ஆதரவு ஏதுமின்றி தன்னாலேயே நிர்மாணித்துவிட்டு, 'விடமாட்டேன் — மக்கள் விருப்பப்படி நடக்கமாட்டேன்' என்று சிங்கக்குரல் கொண்டு செப்புகிறார். ஆனால், வரலாறு கூறும் உண்மையோ மக்கள் விருப்பத்துக்கு மாறாகத் துப்பாக்கி முனையின் துணைகொண்டு திணிக்கப்பட்ட அரசு—அது பெரும் பலம் பொருந்திய அரசாக இருந்தாலும், நிலைத்து வாழ்ந்ததில்லை—முடிவில் பொடிப்பொடியாகத்தான் போயிருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகக் காட்டுவதாக இருக்கிறது.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள்

வீடுகள்கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்

புதுடில்லி, பிப். 1—

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு நவம்பர் இறுதியுடன், இந்திய சர்க்கார் கடனாகவும் மானியமாகவும் மொத்தம் ரூ 35,62,005 வழங்கியிருக்கின்றனராம்.

கோவை மாவட்டத்தைச்சேர்ந்த மேட்டுப்பாளையத்தில் 96 ஒற்றை அறை வீடுகளும், 48 இரட்டை அறை வீடுகளும் கட்ட பின்மேலு தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தவருக்குக் கடனாக ரூ 2,09,760—மானியமாக ரூ 1,04,880 வழங்கப்பட்டிருக்கிறதாம்.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 500 ஒற்றை அறை வீடுகள் கட்டிக் கொள்வதற்கென ரூ 16,50,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகையில் சரி பகுதி கடனாகவும் சரி பகுதி மானியமாகவும் தரப்பட்டிருக்கிறதாம்.

மேலும், பம்பாயிலுள்ள சாந்தாகுரூஸ் விமானதளத்தில், ஊழியர் குடியிருப்புக்கான வீடுகள் கட்டிக்கொள்ள 'ஏர்—இந்தியா, இண்டர் நேஷனல்' நிறுவனம் ரூ 8,00,550 பெற்றிருக்கிறது.

மாநிலவாரியாக வாக்காளர் தொகை

புதுடில்லி, சன. 31—

ஜம்மு, காஷ்மீர் நீங்கலாக, இந்தியா முழுமைக்குமான மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை அடங்கிய பட்டியலொன்றை தேர்தல் குழுவினர் வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தியாவிலேயே உத்திரப் பிரதேச மாநிலந்தான் அதிக அளவில் வாக்காளர் எண்ணிக்கை கொண்ட மாநிலமாம். அம்மாநில வாக்காளரின் மொத்த எண்ணிக்கை 3,47,70,434.

உ. பி-க்கு அடுத்தபடியாகப் பம்பாய் மாநிலம் முன் நிற்கிறது. பம்பாய் மாநில மொத்த வாக்காளர் தொகை 2,43,86,525.

மற்ற முன்னை மாநிலங்களும் அவற்றின் மொத்த வாக்காளர் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டிருக்கின்றன :—

ஆந்திரப் பிரதேசம்	1,76,63,747
அசாம்	43,74,089
பீகார்	1,95,63,747
கேரளம்	75,59,047
மத்தியப் பிரதேசம்	1,38,80,209
சென்னை	1,75,99,056
மைசூர்	1,01,23,618
ஒரிசா	79,51,805
பஞ்சாப்	91,12,743
இராசஸ்தான்	86,93,031
மேற்கு வங்கம்	1,51,18,061
டில்லி	9,76,306
இமாசலப் பிரதேசம்	6,84,628
மணிபுரி	3,30,110
திரிபுரா	3,45,849

★

தேர்தல் நிலவரம்

இந்தியா முழுமையிலும் தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரங்கள் எண்ணிக்கை

பம்பாய், சன 31—

சென்ற பொதுத் தேர்தல்களின் போது தாக்கல் செய்யப்பட்ட மொத்தம் 26,120 நியமனப் பத்திரங்களில் 1,538 நிராகரிக்கப்பட்டனவாம். 4,347 பேர் 'வாபஸ்' பெற்றனராம். இறுதியில் 17,235 பேர் போட்டியிட்டனராம்.

இந்தப் பொதுத் தேர்தலில் சென்ற தேர்தலின்போது இருந்ததைவிட வாக்காளர் தொகை ஒரு கோடிக்கு மேல் அதிகரித்திருப்பினும், இந்தியா முழுமையிலும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்திருப்போரின் எண்ணிக்கை மிகவும் குறைவுதானாம்!

மத்தியப் பிரதேசத்தில் மக்கள் சபைக்கான 36 இடங்களுக்கு 362 பேர்களும், 288 சட்டசபை இடங்களுக்கு 2,950 பேர்களும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர்; இந்தியாவில் இங்குதான் அதிகப்படியான அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் மக்கள் சபைக்கான 86 இடங்களுக்கு 378 நியமனப் பத்திரங்கள் உட்பட 2,460 பேர் போட்டியிடுகின்றனராம்.

பீகாரில் 53 மக்கள் சபை இடங்களுக்கு 180 பேர்களும், சட்டசபைக்கான 318 இடங்களுக்கு 2,000-த்திற்கும் மேற்பட்டவர்களும் போட்டியிடுகின்றனராம்.

இராசஸ்தானில் 22 மக்கள் சபை இடங்களுக்கு 150 பேர்களும், 176 சட்டசபை இடங்களுக்கு 1,500 பேர்களும் போட்டியிடுகின்றனராம்.

ஆந்திர மாநிலத்தில் 69 சட்டசபை இடங்களுக்கு 330 பேர்களும், மக்கள் சபைக்கான 42 இடங்களுக்கு 182 பேர்களும் போட்டியிடுகின்றனராம்.

ஒரிசாவில் மக்கள் சபைக்கான 20 இடங்களுக்கு 60 பேர்களும், 140 சட்டசபை இடங்களுக்கு 600 பேர்களும் போட்டியிடுகின்றனராம்.

பஞ்சாபில் மக்கள் சபைக்கான 22 இடங்களுக்கு 130 பேர்கள் போட்டியிடுகின்றனராம்.

மேற்கு வங்கத்தில் மக்கள் சபைக்கான 36 இடங்களுக்கு 130 பேர்கள் போட்டியிடுகின்றனராம்.

பம்பாய் மாநிலத்தில் இதுவரையில் சட்டசபைக்கான 241 இடங்களுக்கும் மக்கள் சபைக்கான 44 இடங்களுக்கும் மொத்தம் 1,200 பேர் போட்டியிடுகின்றனராம்.

கேரளத்தில் மொத்தம் மக்கள் சபைக்கான 18 இடங்களுக்கு 68 பேர்களும், சட்டசபைக்கான 126 இடங்களுக்கு 500 பேர்களும் போட்டியிடுகின்றனராம்.

சென்னை மாநிலத்தில் மக்கள் சபைக்கான 41 இடங்களுக்கு 206 பேர்களும், சட்டசபைக்கான 205 இடங்களுக்கும் 1,281 பேர்களும் போட்டியிடுகின்றனர்.

★

தமிழ் நாட்டில் 12 கட்சிகள்

பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றன

சென்னை, பிப். 1—

சென்னை மாநிலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்டு, மக்கள் சோஷலிஸ்டு, லோகியா சோஷலிஸ்டுகள், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி, பிரஜாசுதார் கட்சி, புரட்சி சோஷலிஸ்டுக் கட்சி, பார்வர்டு பிளாக், மக்கள் முன்னேற்றக் கட்சி, எதிர்ப்பு அணி, இந்தியக் குடியரசுக் கட்சி—ஆக 12 கட்சிகள், பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இக்கட்சிகளைத் தவிர, சுயேச்சைகளும் போட்டியிடுகின்றனர்.

பலமுனைப் போட்டி : ஒரு கண்ணோட்டம்

காங்கிரஸ் எல்லா இடங்களுக்கும் போட்டியிடுகிறது. காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி 120 சட்டசபை இடங்களுக்கும், 20 மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுகிறது. கம்யூனிஸ்டுகள் 50 சட்டசபை இடங்களுக்கும் 15 மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுகின்றனர். மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி 17 சட்டசபை இடங்களுக்கும் 3 மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுகிறது. பார்வர்ட் பிளாக் கட்சி 20 சட்டசபை இடங்களுக்கும், 2 மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுகிறது. மக்கள் முன்னேற்றக் கட்சி 10 சட்டசபை இடங்களுக்கும் மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுகிறது. லோகியா சோஷலிஸ்டுகள் 9 சட்டசபை இடங்களுக்கும் 2 மக்கள் சபை இடங்களுக்கும் போட்டியிடுவர்.

புரட்சி சோஷலிஸ்டு ஒரே ஒரு இடத்தில் போட்டியிடுகிறது.

பிரஜாசுதார் கட்சியினர் பல இடங்களில் சுயேச்சைகளாகப் போட்டியிடுகின்றனர்.

★

வாக்காளர் தொகை

அதிகரித்துவிட்டதாம்!

புதுடில்லி, சன. 31—

சென்ற 5 ஆண்டுகளில் இந்தியாவில் வாக்காளர்கள் தொகை சுமார் இரண்டு கோடியாக அதிகரித்திருக்கிறதாம்.

1951-ம் ஆண்டில் மொத்தம் 17,32,16,635 வாக்காளர்கள் இருந்தனர்.

1956-ம ஆண்டில் மொத்தம் 19,31,43,322 வாக்காளர்கள் உள்ளனர்.

மணிப்பூரில்கைத்தயாரிப்பு காகிதத் தொழில்

புதுடில்லி, சன. 31—

மணிப்பூர் மாநிலத்தில் கைத்தயாரிப்புக் காகிதத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை நிறைவேற்றி வைப்பதற்காக உற்பத்திக் காரியாலயம் ரூ 26,095 கடன் தொகை அனுமதித்திருக்கிறது.

பத்தாண்டுக்கால 'சுதந்திரத்'தின் சாதனைகள்!

சேரி வாழ்வோர் தொகை அதிகரித்திருக்கிறது

சென்னை நகரில் மட்டும் 300 சேரிகளில் 2-இலட்சம் பேர் வாழ்கின்றனராம்

சென்னை, பிப் 1—

"சென்னை போன்ற நவீன நகரங்களில் சேரிகள் இருப்பது மிகவும் இழுக்காகும். சென்னை நகரில் மொத்தம் 300 சேரிகள் இருக்கின்றன; இவற்றில் சுமார் 2 இலட்சம் பேர் வாழ்கின்றனர். சென்னை நகரசபை வகுத்துள்ள சேரி சீர்திருத்தத் திட்டத்திற்கு ரூ 4,20,00,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மாநில அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறது; செலவுத் தொகையில் பாதியைக் கடனாகவும், கால் பங்கை மானியமாகவும் மத்திய ஆட்சியிடமிருந்தும், 25 சதவிகிதத்தை மாநில சர்க்காரிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தை அமுலாக்குவதில் இனியும் காலதாமதம் கூடாது; பொது மக்களின் நலனை முன்னிட்டுத் திட்டம் தள்ளிப்போடப்படவும் கூடாது"

என்று, சென்னை மேயர் அவர்கள், பண்டித நேருவிடம் தந்த விண்ணப்பமொன்றில் கோரியிருக்கிறார்.

ரூ. 10 கோடி விலையில்

விமானம் தாங்கிக் கப்பலை இந்தியா வாங்குமாம்

புதுடில்லி, பிப் 1—

1770 டன் எடையுள்ள 'எர்க்குலிஸ்' எனும் பிரிட்டிஷ் விமானந் தாங்கிக் கப்பலை ரூ. 10 கோடி விலையில் இந்திய அரசாங்கம் வாங்குவதற்கு முடிவுசெய்துள்ளதாம்.

1945-ம் ஆண்டில் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்ட அக்கப்பல் நவீன முறையில் திருத்தி அமைக்கப்படுமாம்.

ரஷ்யாவிலிருந்து அலுமினியம்

இறக்குமதியாகுமாம்!

புதுடில்லி, சன 30—

1953 டிசம்பர் 2-ந்தேதி கையொப்பமான வர்த்தக ஒப்பந்தத்திற்கு ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய பட்டியலில அலுமினியம், பட்டைத் திட்டப்படாத மரகதம் சேர்க்கப்பட்டது

முந்திரிப் பருப்பு தாவர எண்ணெய், பாதரட்சைகள், கம்பளித்துணி, அப்ரகம் ஆகியவைகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட வேண்டியவையாகும்.

20 சதவிகித இடங்கள் பெண்களுக்கு!

சென்னை, பிப் 1—

நகரில் ஓடும் சென்னை சர்க்கார் பஸ்களில், இனி பெண்களுக்கென முன்னும் பின்னுமாக 20 சதவிகித இடங்கள் ஒதுக்கப்படும்.

இனி வழக்கம்போல் பெண்கள், ஆண்களுடன் பின்புறமாகவே வண்டிகளில் ஏற வேண்டும் என்றும் நிர்வாகிகள் முடிவு செய்திருக்கின்றனராம்.

உப்புப் பாலைவனம்!

சோவியத் ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சியாளர் குழு ஒன்று, புதிதாக 'அண்டார்க்டிக் உப்புப் பாலைவனம்' ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனராம்.

அண்டார்க்டிக் தீவுகளுக்குக் கப்பல்மூலம் வந்த மேற்குறிப்பிட்ட குழுவினர், ஒரு குறிப்பிட்ட தீவில் வந்திறங்கியதும், அங்கு சுத்தமான தண்ணீரோ, பயிர்களோ எதுவும் காணவில்லையாம்; மாறாக, அத்தீவு முழுமையிலும், எங்கு பார்த்தாலும் உப்புப் படிவங்களே காணப்பட்டனவாம்.

பருவக் காற்றுக்களின் மூலமாக இத்தீவு இப்படி உப்புத்தீவாக மாறியிருக்கலாம் என்றும் அக்குழுவினர் கருதுகின்றனராம்.

ரிசர்வ் பாங்கியின் புதிய கவர்னர்

புதுடில்லி, பிப். 1—

அரசாங்கப் பாங்கியின் தலைவராயிருக்கும் எச். வி. ஆர். அய்யங்கார் ரிசர்வ் பாங்கியின் கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வரும் மார்ச் முதல் தேதியிலிருந்து அய்யங்கார் புதிய பதவியை மேற்கொள்ளுவாராம்.

நிதி இலாகாவில் செயலாளராயிருக்கும் பி சி பட்டாச்சாரியா என்பவர், அரசாங்கப் பாங்கியின் தலைவராக நியமனம் பெற்றிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

இந்துமத வெறியர்கள் விஷமத்தனம்!

ஒன்பது மாணவர்கள் கைது

பாட்னா, சன. 31—

பாட்னா நகரில் உள்ள ஆங்கிலோ—அராபிய உயர்நிலைப் பள்ளி, முஸ்லீம்களால் நிர்வகிக்கப்படுவதாகும்.

அந்தப் பள்ளியில் ஒரு சரசுவதி அம்மன் சிலையை சில மாணவர்கள் நட்டனராம். இதற்கு, பள்ளி நிர்வாகிகளின் அனுமதியை அவர்கள் பெறவில்லை; திருட்டுத்தனமாகச் செய்தார்களாம் இதனை, சட்டத்தை மீறிய இந்த மதவெறிச் செயலில் ஈடுபட்ட இந்த மாணவர்களில் ஒன்பது பேர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

'வசந்த பஞ்சமி' என்ற சரசுவதி பூசை வரும் 5-ந் தேதி கொண்டாடப்படவிருக்கிறதாம்.

மாணவர்களைக் கைது செய்த பின்னர், சரசுவதி சிலையைப் போலீசார், அருகிலிருந்த கோவிலுக்கு அகற்றிச் சென்றனராம் இதை அறிந்த வேறு சில மாணவர்கள் மீண்டும் ஓர் சரசுவதி சிலையை பள்ளியில் கொண்டுவந்து நிறுத்த முயற்சித்தார்களாம்.

போலீசாரும் இதரரும், இந்த விவகாரம் குறித்துக் கடுமையான எச்சரிக்கை விடுத்திருக்கின்றனராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் :

காங்கிரஸ் வளர்ந்தா நாட்டுக்கு நஷ்டம்

★

('மதுரை வீரன்' படத்தில்-'சும்மாஇருந்தா சோற்றுக்கு நஷ்டம்'-என்றஇசை)

காங்கிரஸ் வளர்ந்தா நாட்டுக்கு நஷ்டம்
திராவிடம் பிரிந்தா தீர்ந்திடும் கஷ்டம்

தேர்தல் நாளும் நெருங்குதே தம்பி—நல்லதம்பி—நம்
நாடு வாழ உழைக்கோணும் தம்பி, நல்லதம்பி

மந்திரி பதவிக்கு மக்களைக் கேட்டு
தந்திரமாக வாங்குவார் ஓட்டு
பதவியேற்றதும் சுயநலப் பாட்டு
பாடிக்குவிப்பார் பச்சை நோட்டு

நன்றிகெட்ட கும்பலை தம்பி, நல்லதம்பி—குழி
தோண்டிப் புதைக்க வேணுமே தம்பி, நல்லதம்பி

இமயத்திலிருந்து குமரியின் எல்லை
எங்கள் நாடு என்னும் சொல்லை
சொல்லித் திரியும் மோதிலால் பிள்ளை
கனவிலும் தெற்கை நினைப்பது மில்லை

சுரண்டிவாழும் செயலினை தம்பி, நல்லதம்பி
சுறுசுறுப்பாய் ஒழிக்கோணும் தம்பி, நல்லதம்பி

வறுமை வறுமையென பொறுமை யோடிருந்தா
பெருமை யோடு நாம்வாழ முடியுதா
அருமையான நம் உழைப்பு நிலைக்குதா
அறிந்து வறுமையையொழிக் கோணும் புரியுதா

பறிபோகும் பணத்தை நிறுத்தோணும் தம்பி, நல்லதம்பி
பாரெலாம் திறனைக் காட்டோணும் தம்பி—நல்லதம்பி

உணவுப் பொருள்கள் நம்நாட்டினி லுண்டு
உலோகப் பொருள்களும் பலப்பல உண்டு
கடற்கரை வருவாய் மிகவும் உண்டு
கடமைவீரர் களும் வேணவர் உண்டு

திராவிட நாடு பிரிந்தாலே தம்பி—நல்லதம்பி
தெம்மாங்குப் பாடி வாழ்வோமே தம்பி—நல்லதம்பி

ஏ. கே. குமாரவேலன், சேலூர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஒலியைவிட வேகமாகப் பாயும் இரகசிய ஆயுதம்

எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாதாம்

நியூயார்க், பிப். 1—

உலகில் எந்த இடத்தையும் வேகமாகச் சென்று தாக்கக்கூடிய ஒரு இரகசிய ஆயுதத்தை அமெரிக்க அரசாங்கம் கண்டுபிடித்துள்ளதாம்.

ஒலியைக்காட்டிலும் 20 மடங்கு அதிக வேகத்துடன் இந்த ஆயுதம் செல்லுமாம். இதுவரையில் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு விஞ்ஞான முறையில் எந்த ஆயுதத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்; எனவே, இதை 'இறுதி ஆயுதம்,' என்ற பெயரால் அழைக்கின்றார்களாம்; ஏனெனில், இந்த ஆயுதத்தை ஏவிவிட்டால் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்தச் சக்தியாலும் முடியாதாம்.

14,000 ஊழியர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்?

இன்னும் இரு வாரங்களுக்குள் தங்களுடைய குறைகளைக் கவனிக்காவிடில், காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக 14 000 உறுப்பினர்களைக் கொண்ட பம்பாய் முனிசிபல் ஊழியர் சங்கம் அறிவித்திருக்கிறதாம்.

பேரறிவாளர் எம். என். ராய் நினைவு நாள்

சென்னை, பிப். 1—

"காலஞ்சென்ற எம். என் ராய் அவர்களது அரசியல் அனுபவம் ஒப்புவமையற்றது. அவர் தமது இளமைப் பருவத்தில் பயங்கரமான தேசியவாதிகளுடன் உறவாடிப் பின்னர், பொதுவுடைமைவாதியாக மாறி, அவ்வியக்கத்தில் சிறப்பும் பெற்றமையால் லெனின் அவர்களால் போற்றப்பட்டார். பின்னர் பொதுவுடைமை இயக்கத்திலிருந்து விடுபட்டு, தமது பிற்காலத்தில் 'மனிதாபிமானத்துவம்' என்பது பற்றி பிரச்சாரம் செய்தார்.

"பொதுவுடைமைத் தத்துவம், உலகத்தில் ஒரு பாகத்தில் அனுசரிக்கப்பட்டு, அதில் பெரிய தோர் பலனேற்று உயர்ந்ததாலும். அவர் பிறவியிலேயே சிறந்த சிந்தனையாளராக இருந்ததாலும், மனிதனுடைய என்றுமே மங்காத அறிவு வளர்ச்சியினாலும் பொதுவுடைமைத் தத்துவத்திலுள்ள மதவாதத் தன்மையை உணர்ந்து அதற்கு மாறுகக் கருத்தையும் பொருளாதாரத் தத்துவத்தையும் ஒன்றுகூட்டி, இன்றைய விஞ்ஞான முன்னேற்ற அறிவினைக்கொண்டு தமது 'மனிதாபிமானத் தத்துவத்தை,' அறிந்துள்ளார். அத்தகைய அவர் என்றுமே தமது கொள்கைகளையும், கருத்துக்களையும் எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுப்பதில்லை—கொடுத்ததுமில்லை."

என்று கடந்த மாதம் 26-ந் தேதி சென்னை—நுங்கம்பாக்கம் சமூகநல மன்றத்தில் நடைபெற்ற எம். என். ராய் நினைவு நாள் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் ஜி அன்புதாஸ் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் கலந்துகொண்ட திரு எஸ் இராசன் அவர்கள் எம். என். ராய் அவர்களது வாழ்க்கை வரலாறு குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

(ந-நி)

நாடகப் பேராசிரியர்

பி. சம்பந்தனுருக்குப் பாராட்டு விழா

சென்னை, பிப். 2—

நாடகப் பேராசிரியர் திரு சம்பந்தனார் அவர்களுக்கு, நேற்று சென்னை நகரசபையின் சார்பில் பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது.

சென்னை சுகுண விலாச சபாவிலிருந்து, அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று முன்செல்ல, திறந்த காரில் பேராசிரியர் அவர்கள் அமர்த்தப்பட்டு, தமிழ்நாட்டின் பிரபல திரைப்பட, நாடக நடிகர்கள். நடிகைகள் புடைசூழ, மிகச் சிறந்த முறையில் ஊர்வலமாக நகரசபை ஸ்டேடியத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இவ்விழாவில், சென்னை மேயர் கே. என். சீனிவாசன், கமிஷனர், துணை மேயர், ஆல்டர்மென்கள், நகரசபை உறுப்பினர்கள், பிரதம மாகாண நீதிபதி எஸ் ஏ ஐயாசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர். திரு சம்பந்தனார் அவர்களுடைய தமிழ் மொழிப் பணிகளைச் சிறப்பித்துப் பாராட்டி, அவர் நீடூழி வாழ வாழ்த்தி சென்னை மேயர் அவர்கள், திரு. சம்பந்தனாரிடம் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிப் பேழை ஒன்றில், வரவேற்பிதழை வைத்துக்கொடுத்தார்.

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்குத் திரு சம்பந்தனார் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டு, தமிழ் நாடகக் கலை மேலும் மேலும் வளரவேண்டுமென்றும், அதற்கு உறுதுணையாகச் சென்னை நகரசபை சென்னை நகரில், மேலும் பல நாடகக் கொட்டகைகளை அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் பேசிய தோழர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் நகரில் மேலும் நாடகக் கொட்டகைகளை அமைக்க நகரசபை முன்வந்தால், அவர்களுக்குத் தென்னிந்திய நடிகர் சங்கம், தன்னாலான எல்லா உதவிகளை செய்து தரும் என்று குறிப்பிட்டார்.

நாடகப் பேராசிரியர் திரு. சம்பந்தனார் அவர்களைப் பாராட்டி தென்னிந்திய நடிகர் சங்கம், எம் ஜி ஆர். நாடக மன்றம், சுகுணவிலாச சபை மற்றும் பல நாடகக் கழகங்கள், மன்றங்கள் ஆகியவை சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன

'அவதியுறும் நிலைமை மாறவேண்டும்'

காங்கிரசின் 9 ஆண்டுக்கால ஆட்சியின் இலட்சணம்

திருநெல்வேலி, பிப். 1—

"ஆணவத்தையே தங்கள் கொள்கையாகக் கொண்ட காங்கிரசாரின் ஒன்பதாண்டுக்கால ஆட்சியைத் தலைமேல் தூக்கிச் சுமந்து அவதியுற்ற இந்த நாடு, இனி மேலாவது பகுத்தறிவாளர்களால் ஆளப்படவேண்டிய ஒரு நிலையை நாம் ஏற்படுத்தவேண்டும். அந்த எண்ணத்துடன், வருகின்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெற்றி பெறச் செய்யவேண்டும்"

இவ்வாறு, அண்மையில் திருநெல்வேலியில், கே. வி கே. சாமி நினைவு மன்றச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றின தோழியர் சோதி அம்மையார் குறிப்பிட்டார்கள்.

நெல்லைச் சந்திப்பை அடுத்த சித்தப் பூந்துறையில் கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில், கடந்த 19, 20—1—57 ஆகிய இரு நாட்களிலும் பொங்கல் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

இரு நாட்களிலும் சிலம்ப விளையாட்டுகளுடன் ஊர்வலமும், இதர நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ந-நி)

வண்ணை கே. வி. கே. சாமி நினைவு மன்ற அமைப்பு

நிர்வாகிகள் தேர்தவு

30—1—57 இரவு 9 மணியளவில், சென்னை—வண்ணை பழைய ஆட்டுத்தொட்டி (3-வது வட்டம்) எண் 52, முத்துமாரியம்மன் கோயில் தெரு, தோழர் ஏ முனுசாமி இல்லத்தில், மேற்படி மன்ற அமைப்பு குறித்துத் தோழர் எஸ். பி. டி. திராவிடமணி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், தோழர்கள் பி. சண்முகம், இரா புட்பராசு, ஜி கிருஷ்ணசாமி, ஏ முனுசாமி ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொறுப்பாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிறுவப்படும் இடம் 'மூடுமந்திர'மா?

புதுடில்லி, பிப். 1—

சோவியத் நிபுணர்கள் குழு ஒன்று இந்தியாவில் கனரக இயந்திரங்கள், இயந்திரச் சாமான்கள் உற்பத்திச் செய்யும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான அறிக்கை ஒன்றை நேருவிடம் அளித்திருக்கிறதாம.

ஆண்டுக்கு 80 ஆயிரம் டன் இயந்திர உற்பத்திச் செய்யும் சக்தி இத்தொழிற்சாலைக்கு இருக்குமாம.

இந்தத் தொழிற்சாலையில் ஆயிரம் பேர் பணியாற்றக்கூடுமாம்.

'திராவிட நாடு' மத்தியகாலக் கோரிக்கையானால்....

'இராம ராஜ்யம்' காட்டுமிராண்டிக் காலப் பேச்சாயிற்றே!

தி. மு. கழகத்தவர் நாடாளுவதற்கு இலாயக்கற்றவரென்றால்......

காமராசர் எந்த அளவு இலாயக்கு பெற்றவர்?

சென்னைக் கூட்டத்தில் டி. கே. சீனிவாசன் கேள்வி

"இப்போதுதான் நாங்கள் கடையைத்திறந்திருக்கிறோம்; ஒரு கடை நல்லமுறையில் நடைபெற வேண்டுமானால் சரக்கு நல்லவைகளாக இருந்தால் மட்டும் போதாது; வாங்குபவர்களும் வேண்டும். அதுபோல, கடையைத் திறந்து வைத்திருக்கும் நாங்கள், எங்கள் சரக்கு நல்லதென்றுமட்டும் கூற முடியும். வாங்குபவர்களாகிய மக்கள் அதற்கு ஆதரவு தரவேண்டும்; பொதுத் தேர்தலில் நிற்கும் தி. மு. கழக அபேட்சகர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்"

இவ்வாறு, 3-2-57 காலை 10-மணியளவில், சென்னை-மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டத்தில் 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் உரையாற்றிய தோழர் டி. கே. சீனிவாசன் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"அகில உலகிலும் கொடி கட்டிப் பறக்கிறது என்று கூறப்பட்ட நேருவின் கொள்கைக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்கிறது: ரஷ்யா கைவிட்டுவிட்டது; சைனா குத்திக் காட்டுகிறது. இவைகளையெல்லாம் கண்ட பிறகும் இன்னுமா காங்கிரஸ் நண்பர்களுக்கு வெட்கம் பிறக்கவில்லை?

"நேரு பண்டிதர் சரித்திரம் நன்றாகப் படித்தவர்; அவர் நம்முடைய திராவிட நாடு கோரிக்கையை 'மத்திய காலத்தைச் சேர்ந்தது' என்கிறார். நாம் கோரும் திராவிட நாடு மத்திய காலத்தைச் சேர்ந்தது என்றால், அவர் கூறிவரும் 'இராம இராஜ்யம்' காட்டுமிராண்டிகள் காலத்து வாழ்க்கை முறையாயிற்றே? இப்படி காட்டுமிராண்டிக் கால யோசனையுடையவர், 'மத்திய கால' திராவிட நாடு கோரிக்கை பற்றிக் கூறுவது விசித்திரமானதுதான்!

"நேருவுக்கு அடுத்தபடியாகக் காமராசர் நம்மைப் பற்றிப் பேசுகிறார்—'இவர்களெல்லாம் நாடாள இலாயக்கற்றவர்கள்' என்று!

"திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் இன்னும் சட்டசபைக்கே போனவர்களல்ல; சட்டசபைக்குப் போன பிறகல்லவா, நாங்கள் நாடாள இலாயக்குள்ளவர்களா — அற்றவர்களா என்பது தெரியும்?

"வயது வந்த வாலிபன், பெரியவரைப் பார்த்து தனக்குத் திருமணம் செய்துவைக்கக் கேட்கிறான். அந்தப் பெரியவரோ, 'அவ்வாலிபனுக்குத் திருமணம் செய்து வைக்க இலாயக்கில்லை' என்று கூறுகிறார். அவ்வாலிபன் நல்லவனாக இருந்தால் வேண்டுமானால் சும்மா போய் விடுவான்; கொஞ்சம் குறும்புக்காரனாக இருந்தால், சரி; அப்படியானால் நான் இலாயக்குள்ளவனா—இல்லையா என்பதைக் காண்பிக்க ஒரு 'சான்ஸ்' தருகிறீர்களா?' என்றுதான் கேட்பான்!

"நம்மைப் பார்த்து 'இவர்கள் நாடாள இலாயக்கற்றவர்கள்' என்று கூறும் இந்தக் காமராசர் நாடாள இலாயக்குள்ளவரா?

"சட்டசபையில் இராஜா சிதம்பரம் என்ற உறுப்பினர், ஒரு தடவை 'லால்குடி தொகுதியிலே கொலை நடைபெறுகிறதே; காமராசரே தெரியுமா?' என்று கேட்டார்; 'தெரியாது' என்றார் காமராசர்; 'அது பற்றி தங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்; அதாவது தெரியுமா?' என்று அந்த உறுப்பினர் அடுத்தாற்போல் கேட்டார்; அதற்கும் 'தெரியாது' என்று பதில் கூறினார்; மீண்டும் அந்த உறுப்பினர், 'நான் எழுதின கடிதத்திற்கு நீங்கள் பதில் போட்டீர்களே, அதாவது தெரியுமா?' என்று கேட்டாராம்! அதற்கும் 'தெரியாது' என்று கூறினாராம் காமராசர்! இந்தக் காமராசர்தான் இலாயக்குள்ளவராம்; தி. மு. கழகத்தினர் இலாயக்கற்றவர்களாம்!

"இவர்தான் இப்படி என்றால், உள்நாட்டு இலாகா மந்திரியாக கோவிந்த வல்லபபந்த் வந்த பிறகு 2500 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களெல்லாம் நாடாள இலாயக்குடையவர்களாம்; இந்த நாட்டில் சுகாதார மந்திரியாக வீற்றிருக்கும் இராசகுமாரி அமிர்தகௌரி அமைச்சராக இருந்த 108 மாதங்களில் 70 மாதங்கள் வெளிநாடுகளில் இருந்திருக்கிறார் — இவர்களெல்லாம் நாடாளும் இலாயக்குபடைத்தவர்களாம்; இந்த நாட்டின் ரேடியோ மந்திரியாக ஒருவர் வந்தபின், இங்கு ரேடியோ வைத்திருக்கும் எவரும் உள்நாட்டு ரேடியோவைக் கேட்பதே இல்லை. இங்கு இரயில்வே அமைச்சர்கள் இருக்கிறார்கள்; ஆனால் வருடத்திற்கு இரண்டு இரயில்களுக்குக் குறையாமல் கோர விபத்துகளுக்கு உள்ளாகின்றன. இப்படிப் பட்டவர்களையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கும் காங்கிரசு நாடாள இலாயக்குள்ளதாம்; திராவிட முன்னேற்றக் கழகம் இலாயக்கற்றதாம் —கூறுகிறார் காமராசர்!

"இவைகளையெல்லாம் எடை போட்டுத்தான் 'மக்களுக்கும் காங்கிரசுக்கும் இன்று சம்பந்தமே இல்லை; காங்கிரஸ் நிறுவனம் ஒரு சனநாயக நிறுவனம் அல்ல; அது ஒரு சர்வாதிகார நிறுவனம்' என்று நாம் கூறுகிறோம்.

"நாம் இப்படி கூறும்போது, நேரு பண்டிதர், நம்மவரைப் பார்த்து, 'இந்தியாவுக்கு எதிராக வெளிநாடுகளில் எதிர்ப்பு இருக்கும் இந்த நேரத்தில் உள்நாட்டில் காங்கிரசாரைத் தாக்குவதா?' என்று கேட்கிறார்!

"அவர்களுக்கு நாம் கூறுவோம்—தி. மு. கழகம் அப்படிப்பட்ட நிறுவனம் அல்ல; கோதாவில் நின்று கொண்டு சண்டையிடுகிறவன், எதிரியைக் குத்திக் கீழே தள்ளிவிட்டால் மீண்டும் அவனை எழுப்பித்தான் தாக்குவான்; அதுபோலத்தான் தி. மு. கழகமும்!

"1917-ல் அகில உலக இளைஞர் மாநாட்டிற்குச் சென்றிருந்த நேரு, இந்தியா திரும்பினதும் முதன் முதலில் கூறினார் — 'இந்நாட்டில் முன்னேற்றமான சோஷலிசம் ஏற்படவேண்டும்' என்று! அந்த முன்னேற்றமான சோஷலிசம், தேய்ந்து, சோஷலிச பாணியாக மாறிவிட்டது இதிலிருந்து எவ்வளவுதூரம் நேரு பண்டிதர் மாறிவிட்டார் என்பதை மக்கள் தெரிந்துகொண்டு விட்டனர்.

"நேரு நல்லவர்தான்; படித்தறிந்தவர்தான். ஆனாலும் படித்ததைப் பயன்படுத்தத் தெரியவில்லை; எனவே, கண்டபடி பேசுகிறார். அவருடைய உள்ளத்தில் குடிபுகுந்திருப்பது முன்னேற்ற சோஷலிசம்; மேலே காட்டிக் கொள்ளுவது சமாதானம்; அவர் மந்திரியாக இருப்பது வெளிநாட்டு விவகாரத்திற்கு; அவர் நம்பியிருப்பது உள்நாட்டு மக்களை! என்ன வேடிக்கை?

"காங்கிரசைப் பற்றிக் காங்கிரசார் மட்டும்தான் பேசலாம் என்றால், சோஷலிஸ்டுகளைப் பற்றி சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளைப் பற்றி கம்யூனிஸ்டுகளும், தி. மு. கழகத்தைப் பற்றி தி. மு. கழகத்தவரும் மட்டும்தான் பேச முடியும். ஆனால் நேரு பண்டிதர், காங்கிரஸ் பற்றிப் பேசும் நேரத்திலேயே தி. மு. கழகத்தைப் பற்றியும் மற்றக் கட்சிகளைப் பற்றியும் பேசலாம்; ஆனால் தி. மு. கழகத் தலைவரும் மற்றவர்களும் காங்கிரஸ் பற்றிப் பேசக்கூடாது என்றால் அது என்ன நியாயம்?

"நாட்டில் இன்று இருக்கிற எதிர்க்கட்சியினரெல்லாம் யார் யார்? காங்கிரசிலிருந்துதான் கம்யூனிஸ்டுகள் வந்தார்கள்? சோஷலிஸ்டுகளும் காங்கிரசில் இருந்து வெளிவந்தவர்கள்; இப்போது தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிற காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியும் அங்கிருந்து வெளியேறினவர்கள்தான். இவர்களெல்லாம் ஏன் காங்கிரசிலிருந்து வெளியேறினார்கள்? இவர்கள் அங்கிருந்து வெளியே வந்து சொன்னதென்ன? 'நாங்கள் இந்தக் காங்கிரசில் என்னென்ன இருக்கும் என்று நினைத்தோமோ அவை ஒன்றும் இல்லை; எனவே வெளியே வந்துவிட்டோம்' என்று சொன்னார்கள்.

"காங்கிரசிலிருந்து வெளியேறின கம்யூனிஸ்டுகள், 'காங்கிரசில் கம்யூனிசத் தத்துவம் இல்லை' என்றனர்; சோஷலிஸ்டுகள், 'சோஷலிசம் இல்லை' என்றனர்; சீர்திருத்தக் கமிட்டியினர், 'காங்கிரசில் இன்று தியாக உணர்ச்சி இல்லை' என்றனர்.

"தோட்டம் ஒன்று இருக்கிறது; அத்தோட்டத்திற்கு உள்ளே மலர் பறிக்கச் சென்றவன், தோட்டத்தில் மல்லிப் பூ இல்லை—ரோஜாப் பூ இல்லை — செண்பகம் இல்லை—ஒன்றுமே இல்லை என்று கூறி வெளியே வந்து விட்டான். அப்படியானால் என்ன பொருள்? அத்தோட்டத்து மண்ணில் சத்தில்லை என்பதுதானே? அங்கு காளானும், கள்ளியும் தவிர வேறென்ன வளரும்? இவைகளையெல்லாம், காங்கிரசிலிருந்து வெளியேறி வந்தவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கொண்டுதான் நாங்கள் கூறுகிறோம்.

"இன்று காங்கிரஸ் வெளியிட்டிருக்கிற அபேட்சகர்கள் பட்டியலைப் பார்த்தால், யார் யார் தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்று சென்ற தேர்தலில் வெற்றிபெற்றார்களோ அவர்களுடைய பெயர்களையெல்லாம் காணமுடியும். இப்படி தி. மு. கழகத்தினராகிய எங்களுடைய ஆதரவு பெற்றவர்கள்தான் வெற்றி பெற முடியுமென்றால், பிறகு காங்கிரஸ் எதற்கு? இதையேதான் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் கேட்டார். கேட்டமாத்திரத்திலேயே நேரு பண்டிதருக்கு கோபம் பிறந்துவிட்டது—வாய்க்கு வந்தபடி சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசிவிட்டார்.

"இன்னொரு விசித்திரமான வாதத்தையும் நேரு கூறியிருக்கிறார். ஜெயப்பிரகாஷ் நாராயணன் இந்த நாட்டில் நல்ல ஒரு எதிர்க்கட்சியை சர்க்கார் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் நாட்டில் நல்ல எதிர்க்கட்சி ஒன்றை சர்க்கார் உருவாக்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டாரே தவிர, உண்டாக்கவேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால், உருவாக்குவதற்கும், உண்டாக்குவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாத நேருவோ, வேறு எதையோ சொல்லுகிறார் — 'காங்கிரசில் உள்ள நம்முடைய குறைவுகள், தவறுகள், பின்னை மனப்பான்மை—இவைகளால்தான் இந்த நாட்டில் எதிர்க் கட்சி தோன்றிற்று' என்று கூறியிருக்கிறார்

"இதுதான் விசித்திரமாக இருக்கிறது! எதிர்க் கட்சி என்பது எல்லா நாட்டிலும்தான் இருக்கிறது! ஆளும் கட்சி செய்கின்ற தவறுகள்தான் எதிர்க் கட்சிகளை அங்கெல்லாம் உருவாக்குகின்றன. அது இந்த நாட்டில் மட்டுமல்ல—எல்லா நாடுகளிலும்தான்!

"அதேதாற்போல், 'கம்யூனிஸ்டுகள் இந்த நாட்டிற்கு இலாயக்கற்றவர்கள்' என்று கூறுகிறார், பண்டிதர்; 'தி. மு. கழகத்தினர் நாட்டைத் துண்டாடுபவர்கள்' என்று கூறுகிறார். இப்படி, 'நானும் உண்டாக்கமாட்டேன்; உண்டாக்கப்படும் எந்த ஒரு கட்சியையும் உருவாகவும் விடமாட்டேன்' என்கிறார் நேரு! இப்படி நேரு கூறுவது சனநாயக வாதமாகுமா? இவர்களுடைய இந்த சனநாயக இலட்சணம் பற்றி நாம் பேசினால் நம்மை ஏசுகிறார்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

சென்னை—பெரம்பூர்

தொகுதி தி. மு. க. தோழர்கட்கு:

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் சென்னை—பெரம்பூர் பாரக்ஸ் ரோட் (திரு. வி. க. திடல் அருகில்) எண் 13. இல்லத்தில் தற்போது தங்கியிருக்கிறார்கள். எனவே அவருடன் தேர்தல் சம்பந்தமாக அவரைச் சந்திக்க விரும்பும் அத்தொகுதித் தோழர்கள், இம்முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இராமநாதபுரம்

மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு:

5, 6-2-57 ஆகிய இரண்டு நாட்களிலும் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் விருதுநகரில் தங்கியிருந்து கழக வேலைகளைக் கவனிக்க இருக்கிறார். தேர்தல் வேலைகள் குறித்து அவரிடம் கலந்துபேச விரும்புவோர் அவரைச் சந்திக்கவும்.

தி. மு. க. தேர்தல் நிதி சிறப்புச் சொற்பொழிவு

5—2 57 காலை 10-மணியளவில், சேலம் அம்பிகா டாக்கீசில் தி. மு. க. மாணவர் கிளையின் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், தோழர் ஏ. பெரியசாமி தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'பண்டைத் தமிழகத்தில் அரசியல்' என்ற தலைப்பிலும், புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 'கலையும் வாழ்வும்' என்ற தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

பிப். 5: குளித்தலை கூட்டம்
6: தென்கிலை (4—6) அரவக்குறிச்சித் தொகுதி (6—9) சின்னதாராபுரம் அரவக்குறிச்சி தொகுதி
8: சீர்காழி தொகுதி
10: சென்னை மாநாடு
11: காஞ்சி தொகுதி
13: சித்தலவாய்
14: பழைய செயங்கொண்ட சோழபுரம்
18: வெள்ளக்கோயில் (நாமக்கல் பார்லிமெண்ட் தொகுதி)

கழகக் கூட்டங்கள்

☆

திண்ணனூர்:
(இரயில்வே நிலையம் அருகில்)
5—2—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ந. சீதாராமன்
பேசுவோர்:
க. அன்பழகன்
சி. வி. எம். அண்ணாமலை

☆

பழனி:
5—2—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்:
சி. லோகாம்பாள் எம். சி.
பேசுவோர்:
கே. எஸ். சந்தானம்
அ. தமிழரசு

சங்கு கணேசன் உண்ணாநோன்பை நிறுத்திக் கொண்டார்

சென்னை, பிப். 4—

கடந்த 18 நாட்களாக சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுக்காக, உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த காங்கிரசு தியாகியான சங்கு-கணேசன் அவர்கள் நேற்று மாலை உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டார்.

உறுதிமொழி

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை, எல்லா மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கிற கோரிக்கை என்றும், அந்தக் கோரிக்கை நிறைவேற்றத்திற்கு பல கட்சியினரும் பாடுபடுவதாக உறுதிமொழி கூறியிருப்பதாலும் உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார், சங்கு-கணேசன்.

உப்புத் தொழிற்சாலை

செய்யூர் அருகே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு உப்புத் தொழிற்சாலை நிறுவ வேண்டும் என்பதும் கணேசன் அவர்களின் கோரிக்கைகளுள் ஒன்று. அது பற்றி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுவதாக, மத்திய உப்பு இலாகா அதிகாரியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்றும், இது சர்க்காரின் நல்லெண்ணத்திற்கு அறிகுறி என்றும், எனவேதான உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்

நேற்று மாலை 6 மணிக்கு மேல், சிறிது ஆரஞ்சு ரசம் சாப்பிட்டு, உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.